டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 8.07.2026 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 017 - Madurai | Online Edition

# தமிழகத்தில் வெப்பநிலை 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்க வாய்ப்பு!

சென்னை, ஜூலை 7

தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் இன்று முதல் ஜூலை 11-ம் தேதி வரை 4 நாட்களுக்கு வெப்பநிலை இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகரிக்கும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது குறித்து, சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, நேற்று முன் தினம், தமிழகத்தில் ஒரு சில இடங்களில் மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக, நீலகிரி மாவட்டம் பார்வூட், செருமுள்ளி, வூட் பிரையர் எஸ்டேட், தேவாலைவில் தலா 8 செ.மீ மழை பதிவாகியுள்ளது.

தெற்கு குஜராத்திலிருந்து மத்திய கேரளா வரை சராசரி கடல் மட்டத்தில், ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை (Trough) நிலவுகிறது. இதன் காரணமாக, இன்றும், நாளையும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிதமான மழையும், ஏனைய தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசான மழை பெய்யக்கூடும்.

ஜூலை 10-ம் தேதி தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழை பெய்யக்கூடும். ஜூலை 11-ம் தேதி மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் மிதமான மழை பெய்யக்கூடும். ஜூலை 12, 13 ஆகிய தேதிகளில் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக்கூடும்.

இன்று முதல் ஜூலை 11-ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி

மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரு சில இடங்களில் வெப்ப நிலை இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக இருக்கும்.

மீனவர்களைப் பொறுத்தமட்டில் தென் தமிழக கடலோரப் பகுதி, மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதி, வடக்கு ஆந்திர கடலோரப் பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய மத்திய, மேற்கு வங்கக் கடல் பகுதி, தென்மேற்கு வங்கக் கடலின் சில பகுதி, அந்தமான் கடல் பகுதி மற்றும் அதனை ஒட்டிய மத்திய கிழக்கு வங்கக்கடல் பகுதிகளில் ஜூலை 11-ம் தேதி வரை பலத்த சூறாவளி காற்று வீசும். எனவே, இப்பகுதிகளுக்கு மீனவர்கள் மேற்படி தேதிகளில் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# நெல் விதை உற்பத்தி மற்றும் மேலாண்மை தொழில்நுட்பம் குறித்த வெளிவளாக பயிற்சி



கடலூர், ஜூலை 7

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம், விருத்தாசலம் சார்பாக 07.07.26 அன்று முஷ்ணம் வட்டாரம், அம்புஜ வல்லிபேட்டை கிராமத்தில் நெல் விதை உற்பத்தி மற்றும் மேலாண்மை தொழில் நுட்பம் குறித்த வெளிவளாக பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, நெல்லில் புதிய இரகங்கள், நீல பச்சை பாசியின் பயன் பாடு, நாற்றாங்கால் மேலாண்மை தொழில்நுட்பங்கள், நேரடி நெல் விதைப்பு, குறுவை நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள், மண் வளம், இயற்கை விவசாயம், விதை நேர்த்தி ஆகியவற்றின் முக்கியத்துவம் மற்றும் குறுவை நெல் பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை, நெல் பயிரில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மற்றும் களைமேலாண்மை, மாற்றுப் பயிர் சாகுபடி முறைகள் மற்றும் நுண்ணூட்ட சத்து கலவையின் முக்கியத்துவம் பற்றி தெளிவாக விவசாயிகளுக்கு விளக்கினார். இப்பயிற்சியில் கடலூர் மாவட்டம், முஷ்ணம் வட்டாரம், அம்புஜவல்லிபேட்டை கிராமத்தை சேர்ந்த 35க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன் பெற்றனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# பயறுவகை பயிர்களில் தன்னிறைவு குறித்த விவசாயிகள் பயிற்சி



மதுரை, ஜூலை 7

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டாரம், வேளாண்மைத் துறையின் சார்பில் பயறுவகை பயிர்களில் தன்னிறைவு பெறுதல் என்னும் கொள்கையினை வலியுறுத்தி விவசாயி களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் 'Aatmanirbharta in Pulses' என்னும் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மூன்று கட்டங்களாகப் பயிற்சியளித்திட கேட்டுக் கொண்டு உள்ளதைத் தொடர்ந்து முதற்கட்டமாக வில்லூர் கிராமத்தில் பயறுவகை பயிர்களில் தன்னிறைவு குறித்த விவசாயிகள் பயிற்சியானது நடைபெற்றது.

இப்பயிற்சியினை கள்ளிக்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ஜெ.சந்திரகலா, தலைமையேற்று தொடங்கி வைத்து பயறுவகை பயிர்களின் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி விளக்கமளித்தார். ஸ்ரீவில்லிப்பூத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஜோதிமணி, பயறுவகை பயிர்களில் அதிகப்படியான மகசூல் பெறுவதற்கான வழிமுறைகள் பற்றி விளக்கினார். கள்ளிக்குடி வட்டார வேளாண்மை அலுவலர் முனைவர் கு.மாரியப்பன், பயறுவகை பயிர்களில் ஏற்படும் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் பற்றி விளக்கினார். ஓய்வு பெற்ற வேளாண்மை அலுவலர் மகாராஜன், பயறுவகை பயிர் களை தாக்கக்கூடிய பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி விளக்கினார். துணை வேளாண்மை அலுவலர் பாண்டியன், உயிர் உரங்களின் பயன்பாடு குறித்து விளக்கினார். இப்பகுதி உதவி வேளாண்மை அலுவலர் கணபதி, பயறுவகை பயிருக்களுக்கான மானியத் திட்டங்கள் பற்றி விவசாயிகளிடம் தெரிவித்தார். பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் கள்ளிக்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் நன்றியை தெரிவித்துக் கொண்டார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## 2.5 கொத்தமல்லி – புதினா சட்னி (Coriander-Mint Chutney)

### தேவையான பொருட்கள்

- புதினா – 1 கட்டு
- தேங்காய் – ¼ மூடி
- பச்சை மிளகாய் – 2
- புளி – கொட்டை அளவு
- கல் உப்பு

### செய்முறை

அனைத்து பொருட்களையும் மிக்சியில் அரைத்து எடுக்கவும். விரும்பினால் தாளிப்பு சேர்க்கலாம்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**



# வயல் தின விழா நடைபெற்றது



விருதுநகர், ஜூலை 7

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு வட்டாரத்தில் ராமசாமி புரம் கிராமத்தில் 2.7.26 அன்று விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் வயல் தின விழா நடைபெற்றது. இவ்விழா விருதுநகர் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் (உழவர் பயிற்சி நிலையம்) லதா தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவிற்கு வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராணி, விவசாயிகளை வரவேற்று நடப்பாண்டு செயல் படுத்த இருக்கும் மானிய திட்டங்கள், உயிர் உரங்கள் பயன்பாடு, நுண்ணுரங்கள், விதைகள் ஆகிய இடுபொருள்கள் மானியத்தில் வினியோகம் செய்வது குறித்தும், இயற்கை விவசாயத்தின் முக்கியத்துவம் பற்றியும், சொட்டு நீர் பாசனம் மானியத்தில் அமைப்பது பற்றியும் விரிவாக எடுத்துரைத்தார்.

இவ்விழாவில் முனியப்பன், ஜீவா, உதவி வேளாண்மை அலுவலர்கள், வேளாண் துறை, சிவா, உதவி தோட்டக்கலை அலுவலர் தோட்டக்கலைத் துறை, நாகராஜன் இளநிலை பொறியாளர், வேளாண் பொறியியல் துறை, ராகவேந்திரன், கால்நடை உதவியாளர் கால்நடைத்துறை, பெரியசாமி, வன பாதுகாவலர், வனத்துறை அலுவலர்கள் பங்கேற்று துறை சார்ந்த திட்டங்கள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள்.

விழாவில் லதா, வேளாண்மை துணை இயக்குனர், உழவர் பயிற்சி நிலையம், உழவன் செயலி குறித்தும் இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம் குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார். Raphael Drones RGIS Services உரிமையாளர் காவியா குணா ஸ்ரீ, நெல், தென்னை, வாழை போன்ற பயிர் களுக்கு ட்ரோன் மூலம் மருந்துகள் தெளிப்பது குறித்தும் எடுத்துக் கூறி செயல் விளக்கம் காட்டினார். விருதுநகர் உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் அரி புத்திரன், உயிர் உரங்கள் பயன்படுத்துவது முக்கியத்துவம்


மற்றும் பயிர்களுக்கு ரசாயன மருந்துகள் தெளிப்பான் மூலம் பாதுகாப்பாக தெளிக்கும் முறை பற்றியும், விதைப்பதற்கு முன் விதைகளை விதைநேர்த்தி செய்வது பற்றி செயல் விளக்கம் செய்து காட்டினார்.

நடமாடும் மண் பரிசோதனை ஆய்வகத்தின் வேளாண்மை அலுவலர் கோகுல், மண் பரிசோதனை செய்வதன் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார். வத்திராயிருப்பு துணை வேளாண்மை அலுவலர் பாலகிருஷ்ணன், விவசாயி அடையாள அட்டை பதிவேற்றம் குறித்தும், பாரதப் பிரதமரின் விவசாயிகளுக்கான கௌரவ ஊக்கத்தொகை குறித்தும் எடுத்து கூறினார்.

விவசாயிகளின் சந்தேகங்கள் மற்றும் கோரிக்கைகள் கேட்டறிந்து நிவர்த்தி செய்யப்பட்டது. விழாவை விரிவாக்க சீரமைப்பு திட்ட வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஜோதி மஞ்சுளா விவசாயிகளுக்கு நன்றியுரை கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை விரிவாக்க சீரமைப்பு திட்ட அலுவலர்கள் ஜெயகாஷ் பாண்டி மற்றும் சுபாஹி செய்திருந்தனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நாளை முதல் அக்ரி இன்டெக்ஸ் 2026

கோயம்புத்தூர், ஜூலை 7

கோயம்புத்தூர், கொடிசியா தொழிற்காட்சி வளாகத்தில் இந்தியாவின் மாபெரும் வேளாண் கண்காட்சியான 24வது அக்ரி இன்டெக்ஸ் 2026 ஜூலை 09 ஆம் முதல் ஜூலை 13 ஆம் தேதி வரை ஐந்து நாட்களுக்கு நடைபெற உள்ளது.

இது குறித்து கொடிசியா தலைவர் வி.ரங்கசுவாமி, அக்ரி இன்டெக்ஸ் தலைவர் என் ஸ்ரீஹரி ஆகியோர் கூறும்போது, தற்போதைய இந்திய வேளாண்மைத் துறை சார்ந்த நவீன மேம்பாடுகள், தோட்டக்கலை பால் பண்ணை, கோழி வளர்ப்பு, உணவு பதப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு தொழில் நுட்பங் களை ஒரே கூரையின் கீழ் காட்சிப்படுத்தும் நோக்குடன் இந்த சர்வதேச கண்காட்சி ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது.

சுமார் 1,50,000 சதுர அடி பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள இக்கண்காட்சியில் தில்லி, குஜராத், ஹரியானா, கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா, பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் தமிழ்நாடு உட்பட இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 460க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் தங்களது 660 அரங்குகள் மூலம் பங்கேற்கின்றனர். இந்த ஐந்து நாள் நிகழ்வில் இந்தியா முழுவதிலும் இருந்து சுமார் ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் பார்வையாளர்கள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டின் சிறப்பம்சமாக சர்வதேச அளவில் இத்தாலிய வணிக முகமையின் நேரடி பங்கேற்புடன் கூடிய இத்தாலி பெவிலியன் அமைக்கப்படுகிறது. மேலும் மலேசியா, ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளைச் சேர்ந்த சர்வதேச நிறுவனங் களும் தங்களது வணிகப் பங்களிப்பை வழங்குகின்றன. உள்நாட்டு விவசாய மேம்பாட்டுக்காக இந்திய நாட்டு ரக பசுக்கள், காளைகள் மற்றும் ஆடுகள் காட்சிப்படுத்தப்படும் விலங்கு களுக்கான தனிப்பிரிவும், தாவர நாற்றுகளுக்கான நர்சரி பண்ணைகள் பிரிவும் பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ளன. இது மட்டுமின்றி தன்வந்திரி மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் விவசாயிகளுக்கு பெரிதும் பயன்தரும் பாம்பு கடி குறித்த விழிப்புணர்வு மற்றும் வழிகாட்டுதல்கள் வழங்கப்பட உள்ளன என்று தெரிவித்தனர்.

மேலும் கண்காட்சி நடைபெறும் நாட்களில் விவசாயிகளின் அறிவு மேம்பாட்டுடிற்காக ஜுலை 10 அன்று உழவே தலை 8.0' என்ற தலைப்பிலும், ஜுலை 11 அன்று ஊரக இன்னோ வேட்டர்களுக்கான நிகழ்வு என்ற தலைப்பிலும், ஜுலை 12 அன்று பயோ டைனமிக் வேளாண்மை குறித்த அறிமுகம் என்ற தலைப்பிலும் விவதாங்களும் கருத்துரைகளும் நடைபெற உள்ளன.

இக்ககண்காட்சியில் நவீன வேளாண் இயந்திரங்கள், துல்லிய வேளாண்மை சொட்டு நீர் பாசனம் இயற்கை விவசாயம் சூரியசக்தி பம்புகள் பசுமை குடில்கள், பயிர் பாதுகாப்பு, அறுவடைக்கு பிந்தைய தொழில்நுட்பங்கள் குளிர்பதனக் கிடங்குகள் மற்றும் மென்பொருள் சேவைகள் உள்ளிட்ட எண்ணற்ற கூறுகள் காட்சிக்கு வைக்கப்பட உள்ளன.

இதன் மூலம் வேளாண் வல்லுநர்கள், பண்ணை உரிமையாளர்கள், வங்கியாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் விஞ்ஞானிகள் எனப் பல தரப்பினரும் நேரடி பலன் பெற முடியும். விவசாயிகள் தங்களுக்குத் தேவையான புதிய புத்தாக்க முயற்சிகளையும் தொழில்நுட்ப தீர்வுகளையும் எளிதாகக் கண்டறியவும் நிறுவனங்கள் தங்களது நவீன தயாரிப்புகளை உரிய முறையில் சந்தைப்படுத்தவும் இக்கண்காட்சி ஒரு பாலமாக அமையும் என்று கொடிசியா நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

தினமும் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை இக்கண்காட்சியைப் பார்வையிடலாம். வேளாண்மைத் தொழிலையும் தொழில்நுட்பத்தையும் அடுத்த தலைமுறைக்கு கடத்தும் வகையில் மாணவ, மாணவியருக்கு பிரத்யேக நேரம் கண்காட்சியில் ஒதுக்கப்பட்டுள்ளது.

தகவல் : ***யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.***



# விவசாயிகளுக்கான கிசான் கோஸ்தி / வயல் தின விழா




விருதுநகர், ஜூலை 7

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டாரத்தில் விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் அனுப்பன்குளம் கிராமத்தில் கிசான் கோஸ்தி/வயல்தின விழா நிகழ்ச்சி 07.07.2026 அன்று நடைபெற்றது. இது குறித்து சிவகாசி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் இராமசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சிவகாசி வட்டாரத்தில் விரிவாக்க சீரமைப்புத்திட்டத்தின் கீழ் அனுப்பன்குளம் கிராமத்தில் கிசான் கோஸ்தி / வயல்தின விழா நிகழ்ச்சி 07.07.2026 அன்று சிவகாசி வேளாண்மை உதவி இயக்குநர் இராமசாமி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் சிவகாசி,வேளாண்மை அலுவலர் சுமதி கலந்து கொண்டு வேளாண்மைத் துறை மூலம் நடப்பாண்டு செயல்படுத்தப்பட விருக்கும் திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

விருதுநகர், உழவர் பயிற்சி நிலைய வேளாண்மை அலுவலர் கார்த்திகா கலந்து கொண்டு விவசாயிகளுக்கு விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும் இனங்கள் பற்றியும் மண்வள அட்டை மூலம் சமச்சீர் உரமிடுதல் பற்றியும் எடுத்துரைத்தார். திருவில்லிபுத்தூர், பருத்தி ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை பேராசிரியர் முனைவர் இராம்குமார் கலந்து கொண்டு மக்காச்சோள படைப்புழுவினை கட்டுப்படுத்திட கடை பிடிக்க வேண்டிய ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை தொழில் நுட்பங்களை பற்றியும் காட்டுப்பன்றியினை கட்டுப்படுத்த தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழக ஆராய்ச்சி நிலையம் மூலம் வெளியிடப்பட்ட வனவிலங்கு விரட்டி மருந்தினை பயன்படுத்தும் முறை பற்றியும் விரிவாக விவசாயிகளுக்கு விளக்கினார்.

மேலும் இந்நிகழ்வில் தோட்டக்கலைத்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு

தங்களது துறை சார்ந்த திட்டங்களை பற்றி விளக்கி கூறினார். விவசாயிகளுக்கு டிரோன் மூலம் பயிர் பாதுகாப்பு மருந்துகள் தெளிப்பது குறித்தும் விளக்கமளிக்கப்பட்டு செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். இறுதியில் சிவகாசி வட்டார தொழில்நுட்ப மேலாளர் கணேஷ்குமார் நன்றி கூறினார்.

இந்நிகழ்விற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் அருண்குமார் மற்றும் சந்தனலட்சுமி ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்.



# தென்னை மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு விபத்து காப்பீடு (இன்சூரன்ஸ்) தெரியுமா?



தென்னை மரத்தில் தேங்காய் வெட்டுதல், மட்டை வெட்டுதல், பழுது பார்க்க மரம் ஏறும் தொழிலாளர்களுக்கு விபத்து காப்பீடு 7 லட்சம் வரை கிடைக்கும். பிரியமியமாக வெறும் 143 கட்டினாலே போதும், மீதமுள்ள தொகையை தென்னை வளர்ச்சி வாரியமே மானியமாக செலுத்தி விடுகிறது.

**என்ன இன்ஷூரன்ஸ் தெரியுமா?**

கோரா சுரக்ஷா (KERA SURAK SHA) என்னும் விபத்து காப்பீடு திட்டத்தின் கீழ் குறைந்த பிரிமியத்தில் மட்டுமே தொழிலாளர்களிடம் வசூலிக்கப்படுகிறது.

**இதில் சேர என்னென்ன விதிமுறைகள்?**

18 முதல் 65 வயதுக்குட்பட்ட தென்னை மரம் ஏறும் தொழிலாளர்கள் இத்திட்டத்தில் சேரலாம். விபத்து மரணம் அல்லது நிரந்தர ஊனமுற்ற நிலைக்கு ரூ.7லட்சம் வரை காப்பீடு உண்டு. நிரந்தர, பகுதியளவு, ஊனமுற்ற நிலைக்கு ரூ.3.5 லட்சம், மருத்துவ செலவுக்கு 2 லட்சம் வரை வழங்கப்படும்.

ஆம்புலன்ஸ் கட்டணம், வாராந்திர இழப்பீடு மருத்துவமனை தினசரி செலவு, இறுதி சடங்கு உள்ளிட்ட பல்வேறு நலன்கள் வழங்கப்படுகின்றன. பயனாளிகள் வெறும் 143 மட்டுமே பிரியமியமாக செலுத்த வேண்டும்.

**எப்படி விண்ணப்பிப்பது?**

விண்ணப்பிக்க விரும்புவோர் உரிய அலுவலரின் சான்றுடன் (V.A.O) தரவிறக்கம் செய்த விண்ணப்ப படிவம், ஆதார்

அட்டை நகல், வங்கி கணக்கின் முதல் பக்க நகல் இவற்றை இணைத்து தென்னை வளர்ச்சி வாரிய அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். உரிய ஆவணங்கள் சான்றிதழ் சரிபார்ப்பை தொடர்ந்து இழப்பீட்டு தொகை நேரடியாக வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும்.

ஏதேனும் எதிர்பாராத விபத்து ஏற்பட்டால் 72 மணி நேரத்தில் தென்னை வளர்ச்சி வாரியத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.

**விண்ணப்பத்தை எந்த இணைய தளத்தில் தரவிறக்கம் செய்யலாம்?**

Appl.kerasuasha tamil pdf என்ற இணைய தள முகவரியில் அல்லது (https//.coconut board.gov.in.docs / இணைய முகவரியில் ( APPLICATION FORM) படிவத்தை தரவிறக்கம் ( DOWN LOAD) செய்யலாம். கூடுதலான விபரங்களுக்கு உங்களுடைய வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களை அணுகலாம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




# பருத்தி பயிரில் விதை நேர்த்தி மற்றும் பூச்சி நோய் மேலாண்மை பயிற்சி



விருதுநகர், ஜூலை 7

மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி, தமிழக வேளாண் மற்றும் உழவர் நலத்துறை மற்றும் ரிலையன்ஸ் அறக்கட்டளை இணைந்து பருத்தி பயிரில் விதை நேர்த்தி மற்றும் பூச்சி நோய் மேலாண்மை குறித்து 02.07.26 அன்று விருதுநகர் மாவட்டம், காரியாப்பட்டி வட்டம், நந்திகுண்டு கிராமத்தில் நடைபெற்றது.

ரிலையன்ஸ் அறக்கட்டளையை சேர்ந்த அந்தோணி எட்வர்டு சிங் அனைவரையும் வரவேற்று பயிற்சியின் முக்கியத்து வத்தை எடுத்துரைத்தார்.

அதை தொடர்ந்து ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத் தின் பயிர் பாதுகாப்பு அலுவலர் அமுதா, மையத்தின் நோக்கம், பணிகள், பூச்சி கொல்லிகளை பாதுகாப்பாகப் பயன்படுத்தும் முறைகள், பருத்தியில் விதை நேர்த்தி, ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள், தேசிய பூச்சி நோய் அமைப்பு செயலி, பூச்சி கொல்லிகளால் மனிதர்களுக்கு ஏற்படும் தீமைகள், மத்திய மாநில அரசுகளின் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார்.

மேலும் இம்மையத்தை சேர்ந்த உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர்கள் ராஜேஸ்வரி மற்றும் நிசிந்தா, அபின், உயிரியல் நோய் கட்டுப்பாட்டு காரணிகளை கொண்டு விதை நேர்த்தி செய் வதை குறித்து செயல் முறை விளக்கம் அளித்தார். நிகழ்ச்சியின் நிறைவில் கீதா, வேளாண் உதவி இயக்குனர், விதை இருப்பு விவரங்கள், பருத்தி பயிரிடலுக்கான விதை, நுண் சத்து இருப்பு மற்றும் அவசியம் இப்பகுதியில் உள்ள பருத்தி பூச்சி நோய் மேலாண்மை பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். விதை நேர்த்திக்கான உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் வழங்கப்பட்டு நன்றியுரையுடன் முடிவு பெற்றது. நிகழ்ச்சியில் 41 விவசாயிகள் மற்றும் 08 தமிழக வேளாண் மற்றும் ரிலயன்ஸ் அலுவலர்கள் கலந்து கொண்டனர்

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்றுபெற்ற பைப்புகள்
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மக்காசோள சாகுபடிக்கு விதை பரிசோதனை செய்வீர்!



பெரம்பலூர், ஜூலை 7

பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயம் பிரதான தொழிலாக கருதபடுகிறது. ஆண்டு சராசரி மழையளவு 850-900 மி.மீ உள்ள வெப்பமான காலநிலை மக்காசோளம் சாகுபடிக்கு மிகவும் ஏற்றது. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள கரிசல் மண், களிமண் கலந்த வண்டல் மண்ஆ கியவைமக்காசோள சாகுபடிக்கு ஏற்ற மண் வகைகளாகும். மக்காச்சோள பயிரின் பயிர் காலம் பயன்படுத்தப்படும் வீரிய ஒட்டு இரகத்தைப் பொறுத்து 95-120 நாட்கள் ஆகும்.

மக்காச்சோளம் சாகுபடியில் பெரம்பலூர் மாவட்டம் மாநில அளவில் முதலிடம் வகிக்கிறது. நீர்த்தேவை குறைவு என்பதாலும், அதிக மகசூல் திறன் கொண்ட பயிர் என்பதாலும் தானியங்களின் அரசி என்று அழைக்கப்படுகிறது. ஆடி மாதமும் விவசாயமும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையது.

'ஆடிப்பட்டம் தேடி விதை' மற்றும் 'ஆடிப் பிறையைத் தேடி பார்' போன்ற பழமொழிக்கேற்ப பெரம்பலூர் மாவட்டத்தில் ஆடிப் பட்டத்தில் மக்காச்சோள சாகுபடி அதிக அளவில் செய்யப்படும். கடந்த ஆண்டு பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளம் சுமாராக 78571 ஹெக்டேர் பரப்பில் அதாவது 6300 ஹெக்டேர் இறவையிலும் 72271 ஹெக்டேர் மானாவாரியிலும் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. தரமான மக்காசோள விதைகளை பயன்படுத்தினால் விவசாயிகள் அதிக விளைச்சலும், கூடுதல் வருமானமும் பெறலாம். வீரிய மக்காச்சோள விதையின் முளைப்புதிறன் 90 சதவீதத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும். விதைகள் நன்கு திரட்சியாகவும் பதர் மற்றும் கிருமிகள் அற்று இருத்தல் அவசியம்.

மக்காச்சோள விதையின் குறைந்தபட்ச ஈரப்பதம் 12 சதவீத மாகவும், புறத்தூய்மை 98 சதவீதமாகவும் இருக்க வேண்டும். பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டத்திற்கான விதை பரிசோதனை நிலையமானது, பெரம்பலூர் புதிய பேருந்து நிலையம் அருகில் மாவட்ட மைய நூலகம் மேல்புறம் துறை மங்கலம், பெரம்பலூர் 621 220 என்ற முகவரியில் செயல் படுகிறது. இந்நிலையத்தில் விதையின் தர நிர்ணய காரணி களான முளைப்புத்திறன், புறத்தூய்மை, ஈரப்பதம் போன்றவை பரிசோதனை செய்யப்படுகின்றன. ஒரு பணி விதை மாதிரிக்கு ரூ.80 பரிசோதனைக் கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் இரகம், குவியல் எண் ஆகியவை குறித்த விபரச்சீட்டுகளுடன், மக்காச்சோள விதைகள் 500 கிராம் அனுப்பி விதையின் தரத்தை அறிந்து கொள்ளலாம்.

இத்தகவலை பெரம்பலூர் விதை பரிசோதனை நிலையத்தின் வேளாண்மை அலுவலர்கள் ஆஷாலதா மற்றும் அம்பிகா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

# நவீன வேளாண்மையில் தாய் மரம் மற்றும் தாய் விதை தேர்ந்தெடுப்பது எப்படி?

தென்னை மரங்களில் உள்ள இளநீர் சில மரங்களில் மிகவும் சுவையாக இருக்கும். சில மரங்களில் உள்ளவை உப்பு ருசி கலந்திருக்கும், சில மரங்களில் ருசியின்றி இருக்கும். இது இனத்தைப் பொறுத்து மாறுபடும்.

குரங்கு, மரநாய், எலித் தொல்லைகள் அதிகம் உள்ள இடங்களில் உப்பு ருசி கலந்த இன மரங்களின் நெற்றுக்களை முளைக்க வைத்து பிள்ளை தயார் செய்து நடலாம்.

சுவையான இளநீர் உள்ள மரங்களின் குரும்பைகளை எலிகளும், மரநாய், குரங்குகளும் விரும்பி உண்கின்றன. அதனால் அவை நடமாட்டம் உள்ள இடங்களிலும் வீட்டுத் தோட்டங் களிலும் சுவைமிக்க இளநீர் கொண்ட தென்னம் பிள்ளைகளை நட்டுப் பயிரிடலாம். இடம் அறிந்து தென்னம் பிள்ளைகள் நட்டு தோப்பாக்கினால் காட்டுப் பிராணிகள் அழிவிலிருந்து கணிசமாக காப்பாற்ற முடியும்.

தரமான விதை

12 மாதங்கள் தென்னை மரத்திலேயே இருந்து நன்றாகப் பழுத்து காய்ந்த கனம் இல்லாத நெற்றுகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கை பார்த்து நீர் பிடிப்பு அதிகம் இருக்கும் தேங்காய்களை ஒரு நிழல் அறையில் சுமார் இரண்டு வாரங்கள் வரை கண் பாகம் மேல் நோக்கி இருக்கும்படி சாத்தி வைக்கவும்.

நீர் நன்கு சுண்டிப்போன பிறகு மறுபடியும் கை பார்க்க வேண்டும். சந்தேகப்படும் நெற்றை ஒதுக்கிவிட வேண்டும். பரப்பிய சமமான இடத்தில் 80 டிகிரி சாய்வில் ஒரு தேங்காய்க்கு தேங்காய் 3 அங்குலம் இடைவெளி விட்டு அடுக்கி லேசாக கரையான் மருந்து தூவி மணலால் மூடி விடவும். பாத்தியமைத்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

முதல் 20 நாட்கள் வரை ஒரு நாள் விட்டு ஒரு நாள் தண்ணீர் பாய்ச்சவும், அதன் பிறகு வாரம் இருமுறை நீர் பாய்ச்ச வேண்டும். நீர் பாய்ச்சும் போது மணல்மேடு தோன்றுமானால் புது மணல் போட்டு நிரப்பிவிட வேண்டும். தேங்காய் மேல் பாகம் அரை அங்குலம் தெரிந்திருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

வெயில் அதிகம் பாதிக்குமானால் சுமார் 60 நாட்கள் வரை வைக் கோல் கரும்பு இலைச் சருகுகளை லேசாக போட்டு மேல் மணல் காய்ச்சல் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். கீற்று போட்டு மூடி விடலாம். ஆனால் தண்ணீரைப் பாய்ச்சும் போது எடுத்து வைக்க வேண்டிவரும். பின்னர் மட்டைகளை மேலே போட்டு நிழல் கொடுக்கலாம். தண்ணீர் பாய்ச்சும் போது சிரமம் ஏற்படுவதில்லை.

### தரமான பிள்ளை

60 வது நாட்களிலிருந்து 90 நாட்களில் மூளை கூர்மையாக வளர்ந்து வர ஆரம்பிக்கும். 120 நாட்கள் வரை மூளை வந்து கொண்டு இருக்கும். 120 நாட்களில் 90% மூளை வந்துவிடும். 10% பல்வேறு காரணங்களால் மூளை தாமதித்து வரும். அல்லது வராமலும் இருக்கும். அவைகளை எடுத்து விடவும், கெட்டுப் போகா மலிருக்கிற தேங்காயை எண்ணெய் பிழிந்து எடுக்கலாம். கால தாமதமாக மூளை வரும் பிள்ளைகளை நாற்றங்காலில் வைத் திருந்து. தேர்ந்தெடுத்து பிள்ளைகளை நடவுச் செய்ய வேண்டும். மற்றவைகளை அழித்துவிட வேண்டும். 90 முதல் 120 நாட்களில் மூளை வரும் பிள்ளைகளில் அடிப்பாகம் பருமானகவும் இலை அதிகமாகவும் உள்ள வீரியமான பிள்ளைகளை தேர்ந்தெடுத்து நட வேண்டும். அரசாங்க நாற்றங்கால், திருவையாறு தென்னை ஆராய்ச்சி மையத்தில் தரமான தென்னம் பிள்ளைகள் கிடைக் கின்றன. ஆனால் எல்லா விவசாயிகளின் தேவைகளையும் அரசு நாற்றங்களால் பூர்த்தி செய்ய முடிவதில்லை. அதனால் வியாபார ரீதியில் தென்னம் பிள்ளைகள் தயாரித்து விற்கும் தனியாரிடம் பொதுமக்கள் ஏமாந்து போகாமல் இருக்க தங்கள் தென்னை மரங்கள் அல்லது நண்பர்கள் உறவினர்களிடம் நல்ல தாய் மரம்

நிற்குமானால் தோந்தெடுத்து தேவையான நெற்றுகளைப் பெற்று, தங்களுக்குத் தேவையான உயர் ரக நல்ல தென்னம் பிள்ளைகளை தாங்களாகவோ தயார் செய்து கொள்ள முன்வர வேண்டும்.

சில தேங்காய்களில் இயற்கைக்கு மாறாக இரண்டும் அதற்கு மேலும் ஒரே விதையில் முளைத்து பிள்ளைகள் வளர்ந்து வரும். அத்தகைய பிள்ளைகள் அதிக பலன் தருவதில்லை. ஆகையால் நடும்போது ஒதுக்கிவிடுவது நல்லது.

தகவல் : *T. யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.*




# மின்னணு பயிர் சாகுபடி கணக்கீடு மேற்கொள்ள ஊக்கத்தொகை : வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, ஜூலை 7

புதுக்கோட்டை மாவட்டத்தில் மின்னணு பயிர் சாகுபடி கணக்கெடுப்பு பணியில் கலந்து கொண்டு பயன்பெற தன்னார் வலர்களுக்கு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சு.சுந்தரமகாலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், மின்னணு பயிர் சாகுபடி கணக்கீடு என்பது சாகுபடி செய்யப் பட்டுள்ள விவசாயிகளின் பயிர் விவரங்கள் நேரடியாக களத்திற்கு சென்று சேகரிக்கும் பணியாகும். இக்கணக்கெடுப்பு பணியானது காரீப், இராபி மற்றும் கோடை என வருடத்திற்க்கு மூன்று பருவங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப் பணியில் கிராமத்திலுள்ள படித்த இளைஞர்கள், தன்னார் வலர்கள் முழுநேரமாகவோ அல்லது பகுதி நேரமாகவோ பணி மேற்கொண்டு ஊக்கத்தொகை பெற்று பயன்பெறலாம்.

மின்னணு பயிர் சாகுபடி கணக்கெடுப்பு மேற்கொள்ள விரும்பும் நபர்கள் இணைய வசதியுள்ள ஆன்ட்ராய்ட் போன் வைத்திருக்க வேண்டும். மேலும், இப்பணி மேற்கொள்ளும் தன்னார்வலர்களுக்கு, பதிவு செய்யப்படும் உட்பிரிவு எண்ணானது, நடப்பு தரிசு நிலமாக இருப்பின் ஒரு உட்பிரிவிற்கு ரூ.3, ஒற்றை பயிர் சாகுபடியாக இருப்பின் ஒரு உட்பிரிவிற்கு ரூ.5, ஒரே உட்பிரிவு எண்ணில் கூடுதல் பயிர் பதிவு செய்யும் பட்சத்தில் ஒரு பயிருக்கு ரூ.2 வீதம் ஊக்கத்தொகையானது நேரடியாக தன்னார்வலர்களின் வங்கிக் கணக்கிற்க்கு வழங்கப்பட உள்ளது..

எனவே, நடப்பு காரீப் பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர் விவரங்களை மின்னணு பயிர் சாகுபடி கணக்கீடு மூலம் நேரடியாக களத்தில் சென்று சேகரிக்க ஆர்வமுள்ள தன்னார் வலர்கள் உழவர் செயலியில் பதிவு செய்யலாம். மேலும், https://www.tnagrisnet.tn.gov.in/fcms/csu/#-என்ற இணைப்பின் மூலமாக தங்களது விவரங்களை பதிவு செய்து கொள்ளலாம்.

மேற்கண்டவாறு பதிவு செய்த தன்னார்வலர்களுக்கு இப்பணி மேற்கொள்வது தொடர்பான பயிற்சிகள் விரிவாக வழங்கப்படும். மேலும் இது தொடர்பான கூடுதல் விவரங்களுக்கு அருகில் உள்ள வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் விற்பனை மற்றும் வணிகம், வேளாண் பொறியியல், விதை மற்றும் அங்ககச்சான்று ஆகிய துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!




# பருத்தி பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி




மதுரை, ஜூலை 7

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மைத் தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் வில்லூர் கிராமத்தில் பருத்தி பயரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை குறித்த பண்ணைப்பள்ளி நடைபெற்றது. இப்பண்ணைப்பள்ளியினை கள்ளிக்குடி வட்டார ஒருங்கிணைப் பாளர் ஜெ.சந்திரகலா தலைமையேற்று தொடங்கி வைத்து பருத்தி பயிரின் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கமளித்தார்.

ஸ்ரீவில்லிப்பூத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர்.ஜோதிமணி, பருத்தி பயிரில் அதிகப்படியான மகசூல் பெற்று தரும் பருத்தி ஆராய்ச்சி நிலையம் மூலம் வெளியிடப்பட்ட இரகங்கள் பற்றியும் பருத்தி பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றியும் விளக்கினார். கள்ளிக்குடி வட்டார வேளாண்மை அலுவலர் முனைவர் கு.மாரியப்பன், பருத்தியில் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் பற்றி விளக்கினார். ஒய்வு பெற்ற வேளாண்மை அலுவலர் மகாராஜன், பருத்தி பயிரினை தாக்கக்கூடிய தண்டு கூன் வண்டு தாக்குதலை கட்டுப்படுத்தும் வகையில் விவசாயியின் பருத்தி பயிரிடப்பட்டுள்ள நிலத்திலே நேரடியாக தாக்கிய செடியினை விவசாயிகளிடம் காண்ப்பித்து அதனை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி விளக்கினார். துணை வேளாண்மை அலுவலர் .பாண்டியன், உயிர் உரங்களின் பயன்பாடு குறித்து விளக்கினார். இப்பகுதி உதவி வேளாண்மை அலுவலர் கணபதி, பருத்திக்கான மானியத் திட்டங்கள் பற்றி விவசாயிகளிடம் தெரிவித்தார்.

கள்ளிக்குடி வட்டார தொழில்நுட்ப மேலாளர் இந்திராதேவி அவர்கள் அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கி பண்ணைப்பள்ளியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்தார். இப்பண்ணைப்பள்ளி நடத்துவதற்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மலாளர்களான லாவண்யா மற்றும் யுவராஜ்குமரன் ஆகியோர் செய்திருந்தனர்.

# விதை, வேளாண் இடுபொருட்கள் போதுமான அளவில் இருப்பு உள்ளது

திருச்சி, ஜூலை 7

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் விவசாயிகளுக்கு தேவையான விதை மற்றும் இடுபொருட்கள் போதுமான அளவில் இருப்பில் உள்ளதாக திருச்சிராப்பள்ளி, வேளாண்மை இணை இயக்குநர், எம்.சாந்தாமணி தெரிவித்துள்ளார்.

அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் வேளாண்மை உதவி இயக்குநர் (ததக) மற்றும் வேளாண்மை அலுவலர் (ததக) ஆகியோர் ஆய்வு செய்தனர். ஆய்வின்போது நெல் வகையான கோ-54 0.71 மெ.டன், ஏஎஸ்டி-21 8.1 மெ.டன் மற்றும் திருச்சி-5 4.5 மெ.டன் உள்ளிட்ட விதைகளும் உளுந்து வகைகளான வம்பன்-10, வம்பன்-11 உள்ளிட்ட விதைகளின் தேவையான அளவு இருப்பில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. மேலும் அசோஸ்பைரில்லம், பாஸ்போ பாக்டீரியா, பொட்டாஷ் பாக்டீரியா, துத்தநாத பாக்டீரியா, ரைசோபியம் போன்ற உயிர் உரங்களும் சூடோமோனாஸ், டிரைக்கோடெர்மா விரிடி போன்ற உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளும் போதுமாள அளவில் இருப்பில் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

விவசாயிகள் உயிர் உரங்களை பயன்படுத்துவதன் மூலம் மண்ணில் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து, பொட்டா சியம் மற்றும் துத்தநாகம் போன்ற சத்துக்கள் அதிகரித்து பயிரிட்டு அதிகளவில் கிடைக்க வாய்ப்பாகும். இதனால் விவ சாயிகள் உரச்செலவை குறைத்து மண்வளத்தை பாதுகாத்து அதிக மகசூல் பெறலாம். மேலும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணி களை பயன்படுத்துவதன் மூலம் பயிர்களை நோய்களிலிருந்து பாதுகாப்பதோடு மண்ணில் நன்மை செய்யும் நுண்ணுயிர் களையும் அதிகரிக்க முடியும். விவசாயிகள் இம்மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களில் கிடைக்கும் உயிர் உரங்கள், நுண்ணூட்டச்சத்து உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளை பயன்படுத்தி உற்பத்தி செலவை குறைத்து அதிக மகசூல் பெறுமாறு திருச்சிராப்பள்ளி, வேளாண்மை இணை இயக்குநர், எம்.சாந்தாமணி கேட்டுக்கொண்டுள்ளார்.

# பூச்சிகளின் பொருளாதார சேதநிலை

# [Economic Threshold Level - ETL]

### அறிமுகம்

பயிர்களில் பூச்சிகள் தாக்கும் போது, எல்லா நேரங்களிலும் உடனடியாக பூச்சிக்கொல்லி தெளிக்க வேண்டிய அவசிய மில்லை. பூச்சிகளின் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட அளவைத் தாண்டி, பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் நிலையை அடையும் போது மட்டுமே கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இந்த அளவே பொருளாதார சேதநிலை (Economic Threshold Level - ETL) எனப்படுகிறது.

### பொருளாதார சேதநிலை (ETL) என்றால் என்ன?

பூச்சிகளின் எண்ணிக்கை பொருளாதார சேத அளவை (Economic Injury Level - EIL) எட்டுவதற்கு முன்பாக, கட்டுப்பாட்டு நடவடிக்கை களை மேற்கொள்ள வேண்டிய அளவு சிவீஸி ஆகும்.

### பொருளாதார சேத அளவு (Economic Injury Level - EIL)

EIL என்பது பூச்சிகளால் ஏற்படும் சேதத்தின் மதிப்பு, கட்டுப் பாட்டு செலவிற்கு சமமாக இருக்கும் நிலை. அதாவது, இதற்கு கீழே இருந்தால் கட்டுப்பாடு தேவையில்லை. இதற்கு மேல் சென்றால் பொருளாதார இழப்பு ஏற்படும்.

### ETL மற்றும் EIL — வேறுபாடு

| ETL | EIL |
|---|---|
| முன்கூட்டியே எச்சரிக்கை அளவு | உண்மையான பொருளாதார இழப்பு தொடங்கும் அளவு |
| கட்டுப்பாட்டு நடவடிக்கை தொடங்க வேண்டும் | இழப்பு ஏற்கனவே ஆரம்பித்துள்ளது |
| EIL–ஐ விட குறைவான அளவு | ETL–ஐ விட அதிகமான அளவு |

### ETL –ஐ நிர்ணயிக்கும் காரணிகள்

- பயிரின் வயது
- பூச்சிகளின் எண்ணிக்கை
- பூச்சிக்கொல்லி செலவு
- மகசூல் இழப்பின் அளவு
- இயற்கை எதிரிகளின் எண்ணிக்கை
- பூச்சியின் வகை
- பயிரின் சந்தை விலை
- காலநிலை

**ETL-ன் நன்மைகள்**

- தேவையற்ற பூச்சிக்கொல்லி பயன்பாட்டைக் குறைக்கிறது.
- உற்பத்திச் செலவு குறைகிறது.
- சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது.
- பயனுள்ள பூச்சிகள் பாதுகாக்கப்படுகின்றன.
- பூச்சிகளில் மருந்து எதிர்ப்பு (Resistance) உருவாகும் வாய்ப்பு குறைகிறது.
- விவசாயிக்கு அதிக இலாபம் கிடைக்கிறது.

**சில பயிர்களில் ETL எடுத்துக்காட்டுகள்**

| பயிர் | பூச்சி | ETL |
|---|---|---|
| நெல் | தண்டு துளைப்பான் | 5% Dead Heart அல்லது 2% White Ear |
| நெல் | இலை சுருட்டுப்புழு | 10% இலைகள் பாதிப்பு |
| பருத்தி | அமெரிக்க காய்ப்புழு | 5% காய்கள் பாதிப்பு அல்லது 5 முட்டைகள் /100 செடிகள் |
| கரும்பு | ஆரம்ப தண்டு துளைப்பான் | 10% Dead Heart |
| தக்காளி | பழத் துளைப்பான் | 5% பழங்கள் பாதிப்பு |
| கத்திரிக்காய் | காய் மற்றும் தண்டு துளைப்பான் | 5% தாக்குதல் |
| வெண்டை | பழத் துளைப்பான் | 5% தாக்குதல் |

**ETL அடிப்படையில் பூச்சி மேலாண்மை**

- வயலில் வாரத்திற்கு ஒரு முறை கண்காணிக்க வேண்டும்.
- பூச்சிகளின் எண்ணிக்கையை பதிவு செய்ய வேண்டும்.
- ETL-ஐவிட குறைவாக இருந்தால் மருந்து தெளிக்க வேண்டாம்.
- ETL-ஐ எட்டியவுடன் உயிரியல் அல்லது வேதியியல் கட்டுப் பாட்டு முறைகளைப் பயன்படுத்த வேண்டும்.
- ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) முறைகளைப் பின்பற்ற வேண்டும்.

**முடிவுரை :** பொருளாதார சேதநிலை (சிவீஸி) என்பது தேவையற்ற பூச்சிக்கொல்லி பயன்பாட்டைத் தவிர்த்து, குறைந்த செலவில் அதிக மகசூலைப் பெற உதவும் முக்கியமான அறிவியல் அடிப்படையிலான கருவியாகும். ETL-ஐ பின்பற்றுவதன் மூலம் விவசாயிகள் சுற்றுச்சூழலைப் பாதுகாத்து, நிலையான வேளாண்மையை மேம்படுத்த முடியும்.



கட்டுரை ஆசிரியர் : ***ச.பூர்ணிமா, உதவிப்பேராசிரியர் (பூச்சியியல்), பயிர் பாதுகாப்புத் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. மின்னஞ்சல் : poorny29@gmail.com***

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741